*5*

# இயேசு நம்மைப்போல ஆனது ஏன்?

## (2:5-18)

*நமது வசனப் பகுதியான 2:5-18ல், இயேசு மாம்சமானார் - அதாவது, அவர் மனிதரானார், அவர் நம்மைப் போலானார் - என்று எழுத்தாளர் வலியுறுத்தினார். வசனங்கள் 6 மற்றும் 7ல், மனிதர்கள் "தூதர்களைக் காட்டிலும் தாழ்ந்தவர்களாக" படைக்கப்பட்டிருந்தனர் என்பதை வலியுறுத்த, எழுத்தாளர் சங்கீதம் 8ல் இருந்து மேற்கோள் காண்பித்தார். பின்பு 9ம் வசனத்தில், இயேசு "தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டு" இருந்தார் என்று அவர் குறிப்பிட்டார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், இயேசு மனிதரானார். அந்தச் சிந்தனை இவ்வசனப்பகுதி முழுவதிலும் முக்கியத்துவப் படுத்தப்பட்டுள்ளது.*

- *மனிதர்களை இயேசு, தமது ''சகோதரர்'' என்று அழைத்தார் (வசனங்கள் 11, 12).*
- *இயேசு "மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்" (வசனம் 14).*
- *இயேசு ''எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது" (வசனம் 17; என்னால் வலியுறுத்தப்படுகிறது).*

*இந்த உண்மை ஒரு பிரச்சனையை முன்வைக்கிறது.[1] 1:4-14ல், இயேசு தேவதூதர்களைக் காட்டிலும் மேன்மையானவராக (உயர்ந்தவராக) இருந்தார் என்று எழுத்தாளர் வலியுறுத்தினார். அந்த முக்கியமான சத்தியம் மீண்டும் 2:5ல் வலியுறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் இயேசு மாம்சமானார் - அவர் ஒரு மனிதரானார் - என்பதும் உண்மையாகவே உள்ளது, இது அவர் "தூதர்களைக் காட்டிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டார்'' என்று அர்த்தப்படுகிறது. இயேசு, தூதர்களை விட உயர்ந்தவராகவும் தூதர்களைக் காட்டிலும் சற்றுச் சிறியவராகவும் ஆக முடிந்தது எவ்வாறு?*

*இயேசு ஒரு மனிதரானார் ("தூதர்களைக் காட்டிலும் சற்றுச் சிறியவரானார்") என்பது, தூதர்களைக் காட்டிலும் அவர் கொண்டிருந்த உயர்வான தன்மையை ஒன்றுமற்றுப் போகச் செய்வது இல்லை என்பதை, எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் நிலைநாட்டினார். இயேசு நம்மைப் போல ஆனது, அவருக்கு அவசியமானதாக இருந்தது என்பதற்கு எழுத்தாளர் குறைந்தபட்சம் மூன்று காரணங்களைக் கொடுத்தார்.*

## மனிதகுலத்திற்குத் தேவன் கொண்டிருந்த நோக்கத்தை நிறைவேற்ற (2:5-8)

மனிதகுலம் எல்லாவற்றிற்கும் மேலானதாக இருக்க வேண்டும் என்றும் மகிமையினால் அது முடிசூடடப்பட வேண்டும் என்றும் (வசனங்கள் 6, 7, 8அ, ஆ) தேவன் நோக்கங்கொண்டிருந்தார், ஆனால் முதல் மனிதர்களே உலகத்திற்குள் பாவத்தைகொண்டு வந்தனர். இதன் விளைவாக, சகலமும் மனித குலத்திற்குக் கீழ்ப்பட்டிருக்*கவில்லை* (வசனம் 9அ). NEB வேதாகமத்தில், "ஆனால் உண்மையில் மனிதனுக்குச் சகலமும் கீழ்ப்பட்டிருக்கவில்லை என்பதை நாம் காணுகிறோம்" என்றுள்ளது. இயேசு தாமே, தற்காலிகமாக "சகலத்திலும்" நம்மைப்போல் ஆகும் வரையிலும் (2:17), மனிதகுலத்திற்குத் தேவன் கொண்டிருந்த நோக்கம் உணர்ந்தறியப்படாதிருந்தது. "என்றாலும் … தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு" (வசனம் 9அ) என்ற வகையில் நாம் அவரைக் காணுகிறோம். கடைசியில் இயேசு, மனிதகுலத்திற்குத் தேவன் கொண்டிருந்த நோக்கத்தை நிறைவேற்றினார் மற்றும் "மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டார்" (வசனம் 9ஆ).

*இயேசுவின் மூலமாக*, தேவன் "அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து" சேர்ப்பார் (வசனம் 10). இயேசு நம்மைப் போல ஆனதன் விளைவாக, மனித குலத்திற்குத் தேவன் கொண்டிருந்த திட்டம் கடைசியில் உணர்ந்தறியப்பட முடியும்.

## நமக்காக மரணம் அடைய (2:9-16)

கிறிஸ்து மரிப்பது அவசியமாக இருந்தது. 9ம் வசனம், "மரணத்தை உத்தரித்ததினிமித்தம்" என்பதைக் குறிப்பிடுகிறது.[2] இருப்பினும், ஆவிக்குரிய ஜீவி என்ற வகையில் அவர் மரணம் அடைய முடியாதிருந்தது. மாம்சமும் இரத்தமும் ஆகுதல் என்பதே அவர் மரணம் அடையக் கூடிய ஒரே வழியாக இருந்தது. நம்மைப்போல ஆனதன் மூலம் அவர், "தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்க" முடிந்தது (வசனம் 9). நம்முடைய பாவங்களுக்கான தண்டனையை ஏற்றுக்கொள்ள, அவர் நம்மைப் போல ஆகவேண்டியதிருந்தது.

மற்றும், மரிப்பதும் மனிதகுலத்தின் மீது சாத்தான் கொண்டிருந்த மரணப்பிடியை அழிக்க, அவர் மரித்தோரில் இருந்து எழுப்பப்படுவது இயேசுவுக்கு அவசியமாக இருந்தது. மீண்டுமாக இது, இயேசு மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவராவதைக் கேட்டுக்கொண்டது:

> ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும் படிக்கும் அப்படியானார் (வசனம் 14).

இயேசுவின் உயிர்த்தெழுதல் நமது வசனப் பகுதியில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்படவில்லை, ஆனால் அது மறைமுகமாக உணர்த்தப்பட்டுள்ளது.[3] இயேசு, நம்மைப் போலானதாலும் அவர் மரித்தோரில் இருந்து

எழுப்பப்பட்ட படியினாலும், அவர் "ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ண"க் கூடியராக இருக்கிறார் (வசனம் 15).

## நமக்காகப் பரிந்து பேச (2:17, 18)

எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் முதன்மை ஆய்வுக்கருத்து ஒன்று இங்கு அறிமுகப்படுத்தப்படுகிறது: இயேசு நமது பிரதான ஆசாரியராக இருக்கிறார்.[4] இயேசு நம்மைப் பிரதிநிதித்துவப்படுத்த, நமது பிரதான ஆசாரியர் ஆவதற்காக, நம்மைப் போலானார்.

> அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிரித்தி செய்வதற்கேதுவாக, தேவ காரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது. ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார் (வசனங்கள் 17, 18).

பூமிக்குரிய பிரதான ஆசாரியர், பாவநிவிர்த்தி நாளில், ஆண்டின் மிக முக்கியமான பலியைச் செலுத்தினார். இதை அவர், "மக்களின் பாவங்களுக்குப் பரிகாரம் ஏற்படுத்துவதற்காக" தேவனுடைய கோபத்தைத் தணிப்பதற்காக - செய்தார். நமது பிரதான ஆசாரியர் என்ற வகையில் இயேசு. நமது பாவங்களுக்காகத் தம்மையே கையளித்தார். இருப்பினும் அதைக் காட்டிலும் அதிகமானவற்றை அவர் செய்துள்ளார். நமது பிரதான ஆசாரியர் என்ற வகையில் அவர், "சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய" வரத் தொடருகிறார். 4ம் அதிகாரம், நமது பிரதான ஆசாரியர் நமக்காகப் *பரிந்து பேசுகிறார்* என்பதை வலியுறுத்துகிறது (வசனங்கள் 14-16).

இயேசு மனிதரானார் என்பது, அவர் தூதர்களுக்கு மேலானவராக இருப்பதை நீக்கிப் போட்டதா? இல்லை என்று நமது வசனப்பகுதி கூறுகிறது. தேவனுடைய திட்டங்களையும் நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்காக மனிதராவது இயேசுவுக்கு அவசியமாக இருந்தது. அவர் நம்மைப் போலானார் என்ற மாபெரும் சத்தியம், அவரது மாட்சிமையையும் மகிமையையும் உயர்த்துகிறது.

---

குறிப்புகள்

[1](ஆங்கில வேதாகமத்தில்) 6ம் வசனம் "but" என்று தொடங்குகிறது, இது நேர்மாறான ஒப்பீட்டை மறைமுகமாக உணர்த்துகிறது. [2]பாடுபடும் மேசியா என்ற கருத்து, யூத மனதிற்கு இடறுதலுக்கான ஒரு கல்லாக இருந்தது. மேசியா பாடுபடுவது அவசியமாயிருந்தது ஏன் என்பதை எழுத்தாளர் குறிப்பிட்டார். [3]உயிர்த்தெழுதலின் தலைப்பு, எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் பொதுவான வகையில் பல முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது: 6:2; 11:19, 35. [4]இயேசுவின் ஆசாரியத்துவப் பணிப்பொறுப்பு முன்னர் மறைமுகமாக உணர்த்தப்பட்டது (1:3), ஆனால் எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் முதல் முறையாக இவ்விடத்தில் அவர் நமது பிரதான ஆசாரியர் என்று அழைக்கப்பட்டுள்ளார்.